


**18.03.2025**

**தலைப்புச்செய்திகள்**

- **பிரயாக்ராஜ் மகா கும்ப மேளா நம்நாட்டின் ஒருமைப்பாட்டுணர்வை** பறைசாற்றியதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி மக்களவையில் தெரிவித்துள்ளார்.
- **ஆதார் எண்ணை வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைப்பது** தொடர்பான ஆலோசனை கூட்டம் புதுதில்லியில் இன்று பிற்பகல் நடைபெறுகிறது.
- **திருச்சி ஸ்ரீரங்கத்தில் கம்பராமாயண பாராயண** நிகழ்வை மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் இன்றுமாலை தொடங்கி வைக்கிறார்.
- **தமிழக சட்டப்பேரயையில் வரும் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான** 2-ம் நாள் பொதுவிவாதம் இன்று தொடங்கியது.
- **ஸ்விஸ் ஓப்பன் பேட்மிட்டன் போட்டிகள் பேசலில் இன்று** தொடங்குகின்றன.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖

**பிரதமர் - மக்களவை**

**பிரயாக்ராஜில் நடைபெற்ற மகா கும்பவிழா,** வளர்ந்து வரும் இந்தியாவின் ஒருமைப்பாட்டுணர்வை பிரதிபலித்ததாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் மகாகும்ப விழா குறித்து இன்று அறிக்கை தாக்கல் செய்து பேசிய பிரதமர், நம் நாட்டின் ஆற்றலை உலகமே கண்ணோக்கியதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

வேற்றுமையில் ஒற்றுமை என்ற இந்தியாவின் கோட்பாட்டை மகா கும்பமேளா பறைசாற்றியதாகவும் பிரதமர் கூறினார்.

சர்வதேச அளவில் பல்வேறு நெருக்கடிகள் நிலவிய தருணத்தில் இந்த மாபெரும் விழா நம்நாட்டின் மிகப்பெரிய பலமான ஒற்றுமையை வெளிப்படுத்தியதாக அவர் எடுத்துரைத்தார்.

நம் நாட்டின் பல ஆறுகள் அருகும் நிலையில் உள்ளதாகவும், நதி உற்சவத்தை மேற்கொண்டு நீர் பாதுகாப்பின் அவசியத்தை இளைய தலைமுறையினர் இடையே கொண்டுசெல்ல வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

மகா கும்ப விழாவின் வெற்றிக்கு பங்களித்த மக்களுக்கு பாராட்டு தெரிவித்த பிரதமர், இவ்வரலாற்று நிகழ்வு நாட்டு மக்களுக்கு ஒரு உத்வேகத்தை ஏற்படுத்தியதாக எடுத்துரைத்தார்.

மகாகும்ப விழா தேசத்தில் எழுச்சியை ஏற்படுத்தியதாகவும் பல சாதனைகளுக்கான உத்வேகத்திற்கு அடித்தளமாக இருக்கும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இதனிடையே மக்களவையில் பிரதமர் பேச அனுமதி வழங்கியது குறித்து எதிர்கட்சி உறுப்பினர்கள் கோஷங்களை எழுப்பினார்கள்.

பிரதமரும் மத்திய அமைச்சர்களும் அறிக்கை தாக்கல் செய்வதற்கான சட்டங்கள் உள்ளதாக மக்களவை தலைவர் திரு. ஓம்பிர்லா மக்களவையில் எடுத்துரைத்தார்.

ஆனால அமளி தொடரவே மக்களவை நண்பகல் ஒருமணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖

**நிர்மலா சீதாராமன்**

பொதுத்துறை வங்கிகள் 2 லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாய் வாராக்கடனை மீட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அவர், கடந்த 2022-23ம் நிதியாண்டில் 35 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வாராக்கடன் இருந்ததாக எடுத்துரைத்தார்.

வாராக்கடன்கள் தொடர்ந்து மீட்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖❖

**ஜெய்சங்கர்**

**சர்வதேச அளவில் நேர்மையான,** வலுவான சட்ட நெறிமுறைகளின் அவசியத்தை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்

புதுதில்லியில் ரெய்சினா பேச்சுவார்த்தைகளின் கீழ் இன்று உரையாற்றியஅவர், வலுவான சட்ட நெறிமுறைகள் இல்லாததால் வளர்ந்த பெரிய நாடுகள் மட்டுமே பயனடைவதாக குறிப்பிட்டார்.

இறையாண்மை மற்றும் எல்லை பகுதி ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த அமைச்சர், காஷ்மீர் பகுதியை பாகிஸ்தான் முறைகேடாக ஆக்கிரமித்திருப்பதாக குறைகூறினார்.

இவ்விஷயத்தில் ஐ.நா. மற்றும் அமெரிக்கா, கனடா, பிரிட்டன் நாடுகளின் நிலை குறித்து அவர் கேள்வி எழுப்பினார்.

கடந்த 80 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள சர்வதேச சட்ட நெறிமுறைகள் முழுமையாக மறு ஆய்வு செய்யப்பட வேண்டுமென்றும் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

**க்யானேஷ்குமார்**

**ஆதார் எண்ணை வாக்காளர் அடையாள** அட்டையுடன் இணைப்பது தொடர்பான சிறப்பு ஆலோசனை கூட்டம் தலைமை தேர்தல் ஆணையர் திரு. க்யானேஷ்குமார் தலைமையில் இன்று பிற்பகல் புதுதில்லியில் நடைபெறுகிறது.

உள்துறை மற்றும் சட்டப்பேரவை செயலர்கள், ஆதார் தலைமை நிர்வாகி உள்ளிட்டோர் பங்கேற்கும் இச்சிறப்பு கூட்டத்தில் தேர்தல் சவால்களை எதிர்கொள்வதற்கான ஆக்கப்பூர்வ நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்படுகின்றன.

போலி வாக்காளர் அடையாள அட்டை தொடர்பான பிரச்சனைகளை விரைந்து களைவது, வாக்குச்சாவடி அரசியல் முகவர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் வழங்குவது உள்ளிட்டவை குறித்தும் இதில் ஆராயப்படுகிறது.

❖❖❖❖❖❖❖

**கஜேந்திரசிங் ஷெகாவத்**

**திருச்சி ஸ்ரீரங்கம் அருள்மிகு காட்டழகிய சிங்கபெருமாள்** திருக்கோவில் வளாகத்தில் கம்பராமாயண பாராயண நிகழ்வை மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் இன்றுமாலை தொடங்கி வைக்கிறார்.

இதனைத் தொடர்ந்து இன்றிரவு இவ்விழா தொடர்பான அடுத்தகட்ட நிகழ்வுகள் குறித்து அமைச்சர் எடுத்துரைக்கவுள்ளார்.

மத்திய கலாச்சார அமைச்சகத்தின் தஞ்சை தென்னக பண்பாட்டு மையம் சார்பில் நடைபெறும் கம்பராமாயணம் பாராயணத்தை தொடர்ந்து மயிலாடுதுறை மாவட்டம் தேரழுந்தூரில் கம்பர் பிறந்த கம்பர்மேட்டில் வரும் 30-ம் தேதி நடைபெறவுள்ள நிறைவு விழாவில் ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி பங்கேற்கிறார்.

இந்நிகழ்வை தொடர்ந்து அடுத்த மாதம் 6-ம் தேதிவரை கலாச்சார குழுக்களின் கம்பராமாயண கலைநிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

❖❖❖❖❖❖❖

**ச.பே. பொது விவாதம்**

தமிழக சட்டப்பேரயையில் வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட் மீதான பொதுவிவாதம் இன்று தொடங்கியது.

இவ்விவாதத்தை தொடங்கிவைத்து அஇஅதிமுக உறுப்பினர் திரு.செல்லூர் கே.ராஜு பேசினார்.

அப்போது, குறுக்கிட்டு பேசிய பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் **திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி,** புதிய ஆசிரியர்கள் நியமனத்திற்கான அனைத்து கட்ட பணிகளும், முடிவடைந்து, மிக விரைவில், நியமனங்கள் செய்யப்படும் என்றார்

2 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால், தீர்ப்பு கிடைத்தவுடன் ஆசிரியர் நியமனங்கள் தொடங்கப்படும் என்றார்

தொடர்ந்து இந்த விவாதத்தின் போது குறுக்கிட்டு பேசிய தொழில்துறை அமைச்சர் **திரு.டி.ஆர்.பி.ராஜா,** ராமேஸ்வரம் நகரில் புதிய விமான நிலையம் அமைப்பதற்கான பூர்வாங்க பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்

இதுதவிர, கோவை, தூத்துக்குடி, மதுரை உள்ளிட்ட விமான நிலையங்களில் விரிவாக்க பணிகளும் நடைபெற்றிருப்பதாக குறிப்பிட்டார்.

இந்த விவாத்தின் போது பேசிய போக்குவரத்து துறை அமைச்சர் **திரு.எஸ்.எஸ்.சிவசங்கர்,** தனியார் சிற்றுந்துகளை இயக்க வழித்தடங்கள் கண்டறியப்பட்டிருப்பதாகவும், வரும் மே மாதத்திலிருந்து அந்த வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படும் என்றார்

❖❖❖❖❖❖❖

**சட்டப்பேரவை :**

**தமிழ்நாட்டில் குறைந்த பட்சம் ஒவ்வொரு** தொகுதியிலும் 2 தடுப்பணைகள் கட்டப்படும் என்று நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்விநேரத்தின் போது பேசியஅவர், கோவை கிணத்துக்கடவு தொகுதியில் மட்டும் 3 தடுப்பணைகள் இந்த ஆண்டு கட்டப்படும் என்றார்.

தாமிரபரணி ஆறு உள்ளிட்ட ஒருசில முக்கிய ஆறுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பணைகள் கட்டப்படும் என்றும், கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாப கால்வாய் விரைவில் தூர்வாரப்படும் என்றும் கூறினார்.

பெண்ணாகரம் பகுதியில் பெரிய ஏரியை இணைக்கும் கால்வாய் விரைவில் பயன்பாட்டிற்கு வரும் என்று திரு.துரைமுருகன் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

**எ.வ. வேலு**

**தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பெட்ரோல்** பங்க் அமைக்க தகைசால் சான்றிதழ் வழங்குவதற்கான புதிய நெறிமுறைகளை அரசு வகுத்திருப்பதாக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு கூறியுள்ளார்

பேரயையில் இன்று கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அவர், 100 மீட்டர் இடைவெளியில் பங்க் அமைக்கலாம் என்று மத்திய அரசின் நிறுவனம் வழிகாட்டியிருப்பதால் அதற்கேற்ற வகையில் தடையில்லா சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றார்.

திருச்செந்தூர், ராமேஸ்வரம், திருச்செங்கோடு ஆகிய பிரபல வழிபாட்டு தலங்கள் உள்ள இடங்களில் புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் நடைபெறுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்

திருக்கழுக்குன்றம் கிரிவல பாதையை முன்னுரிமை அடிப்படையில் அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும், திருமங்கலம் தொகுதிக்கு உட்பட்ட

கப்பலூர் பகுதியில் விதிமுறைக்கு மாறாக அமைக்கப்பட்டுள்ள சுங்கச்சாவடியை அகற்றுவதற்கு மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரியிடம் வலியுறுத்தியிருப்பதாகவும் அமைச்சர் திரு.எ.வ.வேலு தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

**செந்தில் பாலாஜி வாய்ஸ்**

**தமிழ்நாட்டில் தேவைப்படும் பகுதிகளில்** முன்னுரிமை அடிப்படையில் விரைவில் துணைமின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று மாநில மின்துறை அமைச்சர் திரு.செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது இன்று இதனை தெரிவித்த அவர், சென்னை அம்பத்தூர் பகுதியில் புதைவட மின்கம்பி அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்றார்.

.. **வாய்ஸ்** ..

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தில் வெளியான மேலும் சில தகவல்கள்:**

**வேதாரண்யம் தொகுதியில்** துளசியாபட்டினத்தில் கட்டப்படும் ஔவையார் மணிமண்டபத்தில் அவருடைய பாடல்கள் உள்ளிட்ட தமிழ்நூல்கள் அடங்கிய அறிவுகளஞ்சியம் ஒன்றை அமைக்க, நடவடிக்கை எடுத்து வருவதாக தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் கூறியுள்ளார்.

..

**தமிழ்நாட்டில் இந்த ஆண்டு** 500 புதிய குழந்தைநல மையங்கள் கட்டப்படும் என்றும், சாலையோரங்களில் அமைந்துள்ள மையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டித்தரப்படும் என்றும் சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்

..

**நாமக்கல்** தொகுதி மோகனூரில் அமைந்துள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மேம்படுத்தும் பணி ஆறரை கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருவதாக, மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

**தமிழ்நாட்டில் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த 507** திருக்கோவில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடைபெறும் என்று மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு கூறியுள்ளார்

கும்பகோண துக்காச்சியம்மன் திருக்கோவிலுக்கு யுனெஸ்கோ நிறுவனம் விருது வழங்கியிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்

சுவாமிமலை முருகன் திருக்கோவிலுக்கு செல்ல 3 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவில் மின்தூக்கி அமைக்கும் பணிகள் வரும் ஜூன் மாதத்திற்குள் முடிவடைந்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றார்.

கும்பகோணம் மானம்பாடி அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோவில் திருப்பணிகள் 51 லட்சம் ரூபாய் செலவில் அடுத்தமாதம் 11-ம் தேதி தொடங்கப்படும் என்றும் கூறினார்.

❖❖❖❖❖❖❖

**மீனவர்கள்**

**இலங்கை நெடுந்தீவு கடற்பகுதியில் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி** 3 **ராமேஸ்வர** மீனவர்களையும், அவர்களது மீன்பிடி விசைபடகையும் இலங்கை கடற்படையினர் இன்று பிடித்து சென்றுள்ளனர்.

காங்கேசன் துறைமுக கடற்படை முகாமிற்கு இம்மீனவர்கள் அழைத்து செல்லப்பட்டு விசாரணை மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**தேனி வாய்ஸ்**

**தேனி மாவட்டத்தில் வரும்** 23-ம் தேதி நடைபெறவுள்ள புத்தகத்திருவிழாவிற்கான இலட்சினையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ரஞ்சித்சிங் இன்று வெளியிட்டார்.

இது தொடர்பாக அவர் எடுத்துரைக்கையில்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**ஸ்விஸ் ஓப்பன் பேட்மிட்டன் போட்டிகள்** ஸ்விட்சர்லாந்து பேசலில் இன்று தொடங்குகின்றன

இந்தியா சார்பில் கிரண் ஜார்ஜ், லக்ஷ்யாசென், ஹெச்.எஸ்.பிரணாய், மாள்விகா பன்சோத் உள்ளிட்டோர் களமிறங்குகின்றனர்.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ஆரத்தி, வர்ஷிணி இணை - நெதர்லாந்து, டென்மார்க் இணையை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**